**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 08.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோதண்டன் | ஜாதி | : | |
| தந்தை-பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது ஏர்ணாகுளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் செங்கல் சூலை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். புகாரை நான் தான் கொடுத்தேன். அதில் என்ன எழுதியது என்று தெரியாது. அதை வழக்கறிஞர் எழுதினார். வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து **அ.த.சா.ஆ.1** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வெம்பேடு கிராம்த்தில் உள்ள பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.101/2பி, 102/1ஏஏ-ல் உள்ள செங்கல் தொழிலகத்திற்கு மண் எடுத்து அரசு அனுமதியோடு குவாரி நடத்தி வருகிறேன் என்றும், கீழானூர் பிரேம் என்பவர் அவருடைய லாரியை அனுப்பவதாகவும், அதற்கு இரண்டு லாரிக்கு சவடு மண் இலவசமாக தரவேண்டும் என்றும், அவ்வாறு தரவில்லை என்றால் குவாரி நடத்த முடியாது என்றும், 10.07.2023-லிருந்து நானும், பிரச்சனை வேண்டாம் என்றும், மண் இலவசமாக கொடுத்து வந்தேன் என்றும், 01.08.2023 மதியம் 2.00 மணிக்கு கீழானூர் பிரேம் மற்றும் சில ஆட்களோடு வந்து

என்னை கத்தியை காட்டி மிரட்டி ஜெ.சி.பி. டிரைவர் சுப்பர்வைசர்களை அடித்தார்கள் என்றும், நான் யார் என்று வெங்கல் போலிஸ்டம் கேளுங்கள் என்றும், என் எதிரே நின்றால் ஒருதன் கூட உயிருடன் இருக்க மாட்டேன் என்றும், செங்கள் குவாரி ஓனரை மாமுல் பணம் கட்ட சொல்லு என்றும், உன் உயிர் வேனுமா பேசாம ஓடிடுடா என்று மிரட்டினார் என்றும், இது சம்மந்தமாக பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், மேலும் குவாரியில் சுப்பவைசராக வேலையும் செய்யும் நரசிம்மராஜ் என்கிற ராஜ் கத்தியால் வெட்ட முயற்சித்தார் என்றும், அவர் விலகி கொள்ளவே அவர் மீது வெட்டு படவில்லை என்றும், பிரேம் உடன் வந்தார்கள். மேற்படி நரசிம்மராஜை கையால் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், இந்த விபரத்தை முதல் விசாரணையில் தெரிவிக்கமால் விட்டுவிட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM — Digitally signed by S TASNEEM Date: 2025.10.08 17:21:38 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 08.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நரசிம்மராஜ் | ஜாதி | : | |
| தந்தை–பெயர் | : | தேவேந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் வடமதுரை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1–ன் செங்கல் சூலையில் சுப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வெம்பேடு கிராமத்தில் உள்ள பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.101/2பி, 102/1ஏஏ–ல் உள்ள செங்கல் தொழிலகத்திற்கு மண் எடுத்து அரசு அனுமதியோடு கோதண்டன் குவாரி நடத்தி வருகிறார் என்றும், கீழானூர் பிரேம் என்பவர் அவருடைய லாரியை அனுப்பவதாகவும், அதற்கு இரண்டு லாரிக்கு சவடு மண் இலவசமாக தரவேண்டும் என்றும், அவ்வாறு தரவில்லை என்றால் குவாரி நடத்த முடியாது என்றும், 01.08.2023 மதியம் 2.00 மணிக்கு கீழானூர் பிரேம் மற்றும் சில ஆட்களோடு வந்து என்னை கத்தியை காட்டி மிரட்டி வெட்டவந்தார்கள் என்றும், நான் தப்பித்து உயிர் பிழைத்தேன் என்றும், அவர்கள் என்னை கையால் தாக்கினார்கள் என்றும், இது சம்மந்தமாக கோதண்டன் கொடுத்த புகாரில் போரில் வழக்கு தாக்கல் செய்த விசாரணை செய்தார்கள் என்றும், அதன் பின் 02.08.2023ம் தேதி எனக்கு

ஏற்பட்ட காயத்திற்கு உறவினர் பரந்தாமன் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும், அப்போது அவசர பிரிவில் மூன்று பேர் அடித்ததாக கூறினேன் என்றும், அதை மருத்துவர் பதிவேட்டில் பதிவு செய்தார் என்றும், ஆனால் என்னை அடித்த நபர்கள் ஆறு நபர்கள் என்றும், பதட்டத்தாலும், பயத்தாலும் கூறாமல் விட்டுவிட்டேன் என்றும், அதன் பிறகு வேறு மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்தேன் என்றும், அதன் பிறகு காவல் நிலையத்தில் ஒருத்தரை பிடித்து வைத்திருந்தார்கள் அவர் தான் என்னை அடித்தார் என்று அடையாளம் காட்டினேன் என்றும், தொடர்ந்து கீழானூர் பிரேம், அவருடன் வந்தவர்கள் ஆனந்தன், லோகு என்கிற லோகநாதன், வினோத், ரோஸ் மற்றும் காமராஜ் அவர் கூறியதாக தங்கள் மூலம் தெரிந்து கொண்டதாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.08 17:21:45 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 08.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகதீஷ் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | மஜித் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :

நான் வெங்கல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1–ன் செங்கல் சூலையில் சுப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வெம்பேடு கிராமத்தில் உள்ள பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்.101/2பி, 102/1ஏஏ–ல் உள்ள செங்கல் தொழிலகத்திற்கு மண் எடுத்து அரசு அனுமதியோடு கோதண்டன் குவாரி நடத்தி வருகிறார் என்றும், குவாரியில் ஜெ.சி.பி. ஆப்பிரேட்டராக வேலை பார்த்து வருகிறேன் என்றும், கீழானுர் பிரேம் என்பவருடன் சேர்த்து ஐந்து நபர்கள் 01.08.2023 மதியம் 2.00 மணிக்கு வந்து எங்களை மிரட்டி கையால் அடித்த அசிங்கமாக பேசி மாமுல் கேட்டு என்னுடன் வேலை செய்யும் நரசிம்மராஜை வெட்ட வந்த போது அவர் விலகி கொண்டதால் அவர் உயிர் பிழைத்தார் என்றும், இது சம்மந்தமாக கோதன்டன் என்பவர் போலிசில் புகார் கொடுத்தார் என்றும், இது சம்மந்தமாக 02.08.2023 காவல் நிலையம் வருமாறு போலிசார் அழைத்ததால் நான் அங்கு

சென்ற போது அங்கு ஒரு நபரை போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள் என்றும், அவர் அடையாளம் காட்டி இவர் தான் எங்களை கொலை செய்வதாக மிரட்டனார் என்றும், அதை தொடர்ந்து அவருடன் வந்த கீழானூர் பிரேம், அவருடன் வந்தவர்கள் ஆனந்தன், லோகு என்கிற லோகநாதன், வினோத், ரோஸ் மற்றும் காமராஜ் அவர் கூறியதாக தங்கள் மூலம் தெரிந்து கொண்டதாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.08 17:21:51 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.